# நெசவாளருக்கு நூல்; மக்களுக்குத் துணி

ஆர். கே. சாந்துலால்,
காரியதரிசி, தமிழ்நாடு கைத்தறி நெசவு
தொழிலாளர் சம்மேளனம்.

ஜனசக்தி பிரசுராலயம்
1/6, டேவிட்ஸன் தெரு,
ஜி. டி., சென்னை.

M71+
N46
1725

[விலை 2 அணா

Janasakthi Publishing House Q. H. M, S. 402
Printed at the Janasakti Press Q. H. M. S. 374
Date of Printing: 26th June, 1946.

# முன்னுரை

துணிப் பஞ்சம் ஜனங்கள் கழுத்தை நெரிக்கும் இந்த நெருக்கடியான சமயத்தில், துணிப் பஞ்சத்தைத் தீர்க்க வழி காட்டுகிறவர்கள் உண்மையில் தேசத்திற்கு அளவுகடந்த சேவை செய்கிறார்கள். ஏன்? இன்று தேசமக்களை வாட்டி வதைக்கும் கொடிய பஞ்சங்களில் துணிப் பஞ்சமும் ஒன்று.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் கஷ்டத்தை இந்த சிறு பிரசுரம் தெளிவாக விளக்குகின்றது. பஞ்சாலைகள் சரியாக நிர்வகிக்கப்படாததால், பஞ்சாலைகள் லாப வெறி படைத்தவர்களின் ஆதிக்கத்தில் இருப்பதால், உற்பத்தியும் விநியோகமும் திட்டப்படி நடைபெறாததால், கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் வாழ்க்கை எவ்வாறு சீர்குலைகிறது என்பதை இந்த பிரசுரத்தில் தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனப் பொதுக்காரியதரிசி தோழர் ஆர். கே. சாந்துலால் புள்ளி விவரங்களுடன் தெளிவாக விளக்குகிறார். இந்த மாகாணத்தில் உற்பத்தியாகும் நூலில் பெரும்பகுதி வெளி மாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதையும், இந்த மாகாணத்திலுள்ள கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் நூலின்றி வாடுவதையும் அவர் ஆதாரப்பூர்வமாக எடுத்துக் காட்டுகிறார். அத்துடன் தரகர்களின் திருவிளையாடல்களையும், அவர்கள் இரக்கமின்றி நெசவுத் தொழிலாளர்களையும் பொது ஜனங்களையும் சுரண்டும் முறையையும் புட்டுக் காட்டுகிறார். தாறுமாறான உற்பத்தியாலும், விநியோகத்தாலும் துணிகளின் விலை அதிகரிப்பதையும் அவர் விளக்குகிறார். இந்தச் சிக்கல்களை எவ்வாறு சிக்கறுப்பது என்பதையும் அவர் சொல்லுகிறார். அவர் காட்டும் வழி என்ன?

1. கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் மாதத்தில் இருபது நாட்கள் வேலை செய்யப் போதுமான அளவு அவர்களுக்குத் தொடர்ச்சியாக நூல் சப்ளை செய்ய வேண்டும்.

2. குறைந்த விலையில் ஜனங்களுக்குத் துணி கிடைக்கும்படி செய்யவேண்டும்.

3. நெசவுத் தொழிலாளர்களுக்கும் பொதுஜனங்களுக்கும் மத்தியில் நின்று இந்த இரு சாராரையும் சுரண்டும் தரகு முறை ஒழியவேண்டும்.

4. உற்பத்தியையும், விநியோகத்தையும் கூட்டுக் கமிட்டிகள் நிர்வகிக்கவேண்டும்.

5. கூட்டுறவு இயக்கத்தை வளர்க்கவேண்டும்.

இந்தத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவருவதற்காக தமிழ்நாடு கைத்தறி நெசவுத் தொழிலாளர் சம்மேளனம் கடந்த ஒரு வருடமாக இடைவிடாது கிளர்ச்சி செய்து வருகிறது. நெசவுத் தொழிலாளர்களின் அந்தக் கிளர்ச்சிக்கு ஜனங்கள் பக்கபலமாக நிற்கவேண்டும். இந்த வேலையில் சட்டசபை அங்கத்தினர்களுக்குப் பெரும் பங்கு உண்டு என்பதை நாம் இங்கே குறிப்பிட ஆசைப்படுகிறோம்.

துணிப் பஞ்சத்தைத் தீர்க்க நமக்கு முன்னிருக்கும் வழி இது ஒன்றுதான்.

துணிப் பஞ்சம் ஜனங்களை உலுக்கும் இந்த நாட்களில்கூட "துணித் திருடர்கள்" பகிரங்கமாக நடமாடுவது விந்தைதான்! இந்தத் திருடர்கள் பொதுஜனங்களின் முதல் நம்பர் விரோதிகள்! இந்தத் திருடர்களை வேரறுக்கும் வேலையில் மந்திரி சபை உடனே கவனம் செலுத்தவேண்டும். துணிப் பஞ்சத்திற்கு எதிராக நடக்கும் போராட்டத்தின் ஒரு பகுதி இது.

இந்தப் பிரசுரத்தை நாம் எல்லோருக்கும் சிபார்சு செய்கிறோம். இந்த நூலில் கண்ட திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர எல்லோரும் சேர்ந்து—மந்திரிகள், சட்டசபை அங்கத்தினர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், பொதுஜனங்கள்---முயலுவோம். வெற்றி நமதே!

சென்னை,
23-6-'46.

**பி. பாலச்சந்திர மேனன்,**
பொதுக்காரியதரிசி,
**சென்னை மாகாண தொழிற்சங்க காங்கிரஸ்.**

# நெசவாளருக்கு நூல்; மக்களுக்குத் துணி

நமது சென்னை மாகாணத்தில் நூல், ஜவுளி நிலைமை எவ்வளவு மோசமாயிருக்கிறது என்பதை சமீபத்தில் சட்ட சபையில் நடந்த விவாதம் எடுத்துக் காட்டியது. இந்தக் கடினமான பிரச்னையைத் தீர்ப்பதில் பொது ஜனங்களுடைய கவனம் திரும்பி யிருப்பது வரவேற்கத் தக்கது.

நெசவாளருக்கு அதிகப்படியான நூல், கள்ள மார்க்கெட் ஒழிப்பு, துணிப் பங்கீடு, டெக்ஸ்டைல் கண்ட்ரோல் டிபார்ட்மெண்ட் சீரமைப்பு, கைத்தறி ஜவுளி விலைக் கட்டுப்பாடு, கைத்தறி ஜவுளி ஏற்றுமதி போன்ற பொதுஜனங்களுடைய பிரச்னைகள்மீது பல அங்கத்தினர்களால் அபிப்ராயங்களும், யோசனைகளும் கொடுக்கப்பட்டன.

நமது மாகாணத்திற்கு வந்து சேரும் மில் ஜவுளி மாதம் ஒன்றுக்கு 8307 பேல்கள் (1 பேல்—1500 கஜம்) தான் என்பதையும், நமது மாகாணத்தில் உள்ள 5 லக்ஷம் கைத்தறிகளும் மாதத்தில் 10 நாட்கள்தான் வேலை செய்ய முடிகின்றன என்பதையும் பார்த்தால், சர்க்காரின் சென்ஸஸ்படி நமது மாகாணத்தில் உள்ள 5 லக்ஷம் தறிகளுக்கும் போதிய நூல் சப்ளை ஆகாமல் துணிப் பஞ்சத்தைப் போக்க முடியும் என்பது வீண் பிரமைதான் என்பது விளங்கும்.

நமது மாகாணத்தில் அட்வைஸரி சர்க்கார் ஆக்ஷி செலுத்திய பொழுது அகில இந்திய நூல் வினியோகத் திட்டம் வகுக்கப்பட்டது. சென்னை மாகாணத்திற்கென நூல் நிர்ணயிக்கும் விஷயத்தில் குறைந்த கோட்டாவை சரியென அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றார்கள். அதாவது எத்தனையோ வருஷங்களுக்கு முன்னால் தாமஸ் துரையின் (Fact Finding Committee) உண்மை அறியும் கமிட்டியால் நமது மாகாணத்திலுள்ள தறிகள் 3 லக்ஷம் என எடுக்கப்பட்ட கணக்கின் அடிப்படையில் சென்னை மாகாணத்தின் நூல் அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதனால் 10 நாட்களுக்கு போதுமான நூல்தான் கைத்தறிகளுக்கு சப்ளை செய்ய முடிகின்றது என்று மாகாண டெக்ஸ்டைல் கமிஷனரால், சட்ட சபை மெம்பர்களுக்கு அவர் சமர்ப்பித்த அறிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வெளி மாகாணங்களுக்காகவும், ராணுவத் தேவைக்காகவு மாக சேர்ந்து 400 ராத்தல் கொண்ட 20,619 பேல் நூல் ஏற்று மதி செய்வதற்குப் பர்த்தியாக நமக்கு பம்பாயிலிருந்து 8307 பேல் மில் ஜவுளிதான் கிடைக்கிறது.

தேசம் பூராவும் நூல், துணிப்பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் அகில இந்தியாவிற்கென ஒரு திட்டம் வகுப்பதில் யாருக்கும் ஆக்ஷேபணை கிடையாது. ஆனால் நமது மாகாணத்தின் பிரதான மான தொழில்கள் (Spinning) ஸ்பின்னிங்கும், கைத்தறி நெசவுத் தொழிலும்தான் என்பதைப் பார்த்தால், நமது பிரதான தொழி லுக்கு வேண்டிய மூலப்பொருளான நூலை இதர பிரதேசங்களுக் குக் கொடுத்துவிட்டு நெசவாளர் நூலுக்கும், பொது ஜனங்கள் துணிக்குமாக திண்டாட விடுவது எந்த நியாயத்திலும் சேராது.

நூலுக்குப் பதிலாக நமது மாகாணத்தில் உற்பத்தி ஆகும் உபரி ஜவுளியைக் கணக்குப்பார்த்து வெளி மாகாணங்களுடனும் சமஸ்தானங்களுடனும் மாற்று செய்துகொண்டால், நமது மாகா ணத்தின் புராதன கைத்தொழிலாகிய கைத்தறி நெசவுத் தொழி லைப் பாதுகாப்பது மன்னியில், நமது மாகாணத்தின் மக்களுக்கு, அகில இந்திய ஜவுளி வினியோக திட்டத்தின்படி, மாதம் 1-க்கு தலா 12 கெஜம் துணி வீதம் கொடுத்ததுபோக, நமக்கு வந்து சேரும் 8307 பேல் மில் ஜவுளிக்குப் பர்த்தியாக, மாதம் 1-க்கு 26,465 (1 பேல் 1500 கெஜம்) பேல்கள் கைத்தறி ஜவுளியாகவும், மில் ஜவுளியாகவும் ஏற்றுமதி செய்யமுடியும். இந்த கணக்கு நமது மாகாணத்தில் உள்ள 5 லக்ஷம் கைத்தறி நெசவாளருக்கும் மாதம் 1க்கு குறைந்த பக்ஷம் 20 நாட்களாவது வேலை செய்யக் கூடிய அளவுக்கு நூல் சப்ளை செய்யப்பட வேண்டும் என்கிற நியாயமான அடிப்படையில் போடப்பட்டிருக்கிறது என்பதை கவனத்தில் கொள்ன வேண்டும். எப்படி என்று பார்ப்போம்? நமது மாகாணத்தில் உள்ள 5 லக்ஷம் கைத்தறிகளுக்கும் 20 நாட் களுக்குப் போதிய நூல் சப்ளைசெய்ய தேவையான பேல் 38,880.

38,880 பேல்களுக்குமேல் 1-க்கு 1800 கெஜம் வீதம்

| | | |
|---|---|---|
| நமது மாகாணத்தின் கைத்தறி ஜவுளி உற்பத்தி | 46,656 | பேல் |
| ஏற்றுமதிபோக பாக்கி நமது மில் ஜவுளி உற்பத்தி | 5,200 | ,, |
| வெளி மாகாணங்களிலிருந்து நமக்கு கிடைக்கும் மில் ஜவுளி | 8,307 | ,, |
| இதர இடங்களிலிருந்து நமக்கு கிடைப்பது | 376 | ,, |
| | 60,539 | ,, |

| | |
|---|---|
| வெளி மாகாணங்களுக்கு நமது மில் ஜவுளி ஏற்றுமதி | 1,455 பேல் |
| நமது மாகாணத்திற்கு தலா 12 கெஜம் வீதம் நாம் பெற வேண்டிய ஜவுளி | 31,951 ,, |
| | 33,406 ,, |

| | |
|---|---|
| நமது மாகாணத்தின் உபரி ஜவுளி | 27,133 பேல் |
| தற்சமயம் நாம் வெளி நாட்டுக்கு அனுப்பும் ஜவுளி | 668 ,, |
| கைத்தறிகள் 20 நாட்கள் வேலை செய்தால் மாதா மாதம் நம்மால் இதர இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படக் கூடிய ஜவுளி | 26,465 ,, |

ஆகையால் நம் மாகாணத்தில் உள்ள கைத்தறி நெசவாளரையும், அவர்களை நம்பி வாழும் லக்ஷக்கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றும்பொருட்டு ஒவ்வொரு நெசவுத் தொழிலாளிக்கும் 20 நாட்களாவது வேலை கொடுக்கவேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டி இந்திய சர்க்காரிடம் வற்புறுத்தி தற்சமயம் நம் மாகாணத்திற்குக் கிடைக்கும் 21305 பேல்களிலிருந்து 38880 பேல்களாக நூல் சப்ளையை அதிகரித்துக்கொள்ள காங்கிரஸ் மந்திரி சபை உடனடியாக கவனத்தைச் செலுத்த வேண்டும். நமது மாகாணத்திற்கென நிர்ணயிக்கப்பட்டிருக்கும் மில் ஜவுளி சரியாக வந்து சேராவிட்டாலும், நூல் மாத்திரம் வெளியே போய்க்கொண்டேயிருப்பது குறிப்பிடத்தக்கது.

இன்னுமொரு திடுக்கிடத்தக்க விஷயம் என்னவெனில் சென்னை மாகாண டெக்ஸ்டைல் கமிஷனர் காங்கிரஸ் மந்திரி சபைக்கும், சட்டசபை அங்கத்தினர்களுக்கும் ஜவுளி உற்பத்தி புள்ளி விபரம் சமர்ப்பித்ததில் அந்நிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்தது போக பாக்கி மில் ஜவுளி உற்பத்தி 5200 பேல்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் வெளிநாடுகளுக்கு மாதா மாதம் ஏற்றுமதி செய்யப்படும் மில் ஜவுளி எவ்வளவு என்பது மூடுமந்திரமாக இருக்கிறது. இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் ரகசியம் கூடவே கூடாது; ஆகையால் காங்கிரஸ் மந்திரி சபையார் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மில் ஜவுளிக் கணக்கைப் பொது ஜனங்கள் அறிய உடனே எல்லா தினசரி பத்திரிகைகளிலும் பிரசுரிக்க வேண்டும்.

மேலும் நம் மாகாணத்தில் உள்ள பவர் லூம்ஸ், பனியன் பாக்டரி, மீன் வலை, நாடா, டேப் முதலியவைகளுக்காக 2144 பேல் தேவையென்றும், மீதம் 19161 பேல்கள்தான் 5 லக்ஷம் கைத்தறிகளுக்கும் வினியோகிக்கப்படுகிறதென்றும் மாகாண டெக்ஸ்டைல் கமிஷனரின் அறிக்கை தெரிவிக்கிறது. ஆனால் சென்னை மாகாணத்தில் உள்ள எந்த ஜில்லாவை எடுத்துக் கொண்டாலும் தறிகாரருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கார்டு களில் குறித்திருக்கும் நூல் அளவில் 1/4 பாகம் முதல் 1/3 பாகம் வரைதான் சப்ளை செய்யப்படுகின்றது. மில்களுக்கும், தறி காரர்களுக்கும் இடையில் உள்ள தரகர்கள் கண்ட்ரோல் அதிகாரிகளை ஏமாற்றியோ, அல்லது வேறு வழியிலோ அப கரித்து விடுகின்றார்கள் என்பது இதிலிருந்து தெரியவரும். சென்னை மாகாண டெக்ஸ்டைல் கமிஷனரின் நூல் வினியோகத் திட்டம் பார்ப்பதற்கு மிகவும் சிறந்ததாகக் காணப்பட்டாலும், பல தறப்பட்ட வியாபாரிகளையும், மில் முதலாளிகளையும் நம்பி திட்டம் வகுக்கப்பட்டிருப்பதாலும், அவர்களை எல்லாவிதத்திலும் திருப்திசெய்ய முயற்சித்திருப்பதாலும், நடைமுறையில் பல ஊழல்களுக்கு இடம் இருப்பதுடன், மாதாமாதம் ஆயிரக்கணக் கான பேல்கள் கைத்தறி நெசவாளருக்குப் போய்ச் சேருவதில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை.

முதலில் மில் முதலாளிகள் சர்க்காருக்கு உற்பத்தியைக் குறைத்துக் காண்பிக்கும் பொய்க் கணக்கைக் கொடுத்துவிட்டு உபரி நூலைக் கள்ளமார்க்கட்டில் விற்கின்றார்கள் என்பதும், அவர்களைக் கட்டுப்படுத்த சர்க்காரால் கையாலாகவில்லையென்ப தும் பகிரங்க ரகசியம். இம்மாதிரி அவர்கள் கள்ளமார்க்கட் நடத்துவதாலும், 10 நாட்களுக்குக்கூட போதுமான நூல் கிடைப்பதில்லையாதலாலும் நெசவாளருக்கு கள்ளமார்க்கட்டில் நூலை வாங்கித்தான் தொழிலை நடத்தமுடியும் என்கிற நிலைமை ஏற்படுகிறது. அநியாய விலை கொடுத்து பொது ஜனங்கள் வாங் கும் கைத்தறி ஜவுளியின் விலையில் பெரும்பாகம் மில் முதலாளி களுக்குப் போய்ச் சேருகின்றது, ஆகையால் கைத்தறி நெச வாளருக்கு கண்ட்ரோல் விலையில் 20 நாட்களுக்குப் போதுமான நூல் கொடுக்கவும், பொது ஜனங்களுக்கு சரஸமான விலையில் கைத்தறி ஜவுளி கொடுக்கவும், நமது மாகாணத்தின் பிரதான தொழிலில் ஈடுபட்டிருக்கும் நூல் உற்பத்தி ஆலைகளை (Spinning Mills) இந்த நூல் நெருக்கடி, துணிப் பஞ்சம் தீரும்வரையிலாவது சர்க்காரே நமது மாகாணத்தில் உள்ள மில்களின் நிர்வாகத்தை ஏற்று நடத்த காங்கிரஸ் மந்திரி சபை தைரியமாக முன்வரவேண் டும். இந்த முக்கியமான காரியத்தைச் செய்யாமல் நமது மாகா

ணத்தில் உள்ள கோடிக்கணக்கான விவசாயி, பொது ஜனங்களை வாட்டிக்கொண்டிருக்கும் துணிப் பஞ்சத்தைப் போக்குவதில் காங்கிரஸ் மந்திரி சபை கண்டிப்பாக வெற்றி அடைய முடியாது. மில் முதலாளிகள் தற்சமயம் நூல் உற்பத்தி செய்வதில் மிக மோசமானதும் மட்டமானதுமான பஞ்சைக் கலந்து நூற்பதால் பஞ்சாலைத் தொழிலாளருக்கு இந்தத் தொழிலையே வெறுக்கத்தக்க அளவிற்கு கஷ்டமும். நூல் உற்பத்தியில் குறைவும் ஏற்படுவதுடன் உற்பத்தி ஆகும் ஜவுளியும் நீடித்த நாள் உழைக்காமல் சீக்கிரம் கிழிந்தும் போகின்றது. இது துணி நெருக்கடியை இன்னும் மோசமாக்குகிறது. ஆகையால் இதைத்தடுக்க ((Lee Test) நூல் பல பரிசோதனை செய்வதற்கெனவும், நூல் உற்பத்தியை அதிகரிப்பதற்காகவும் சர்க்காரின் டெக்னிகல் அதிகாரி ஒருவரும், ஸ்தல சட்டசபை அங்கத்தினராவது அல்லது ஸ்தல பொதுஜனங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான வேறு யாராவது ஒருவரும், முதலாளியின் பிரதிநிதியும், பஞ்சாலைத் தொழிலாளரின் பிரதிநிதியும், சர்க்காரின் பிரதிநிதியும் கொண்ட உற்பத்திக் கமிட்டி (Production Board) நிறுவப்பட வேண்டும்.

அதற்கடுத்தபடியாக நமது மாகாணத்தில் உள்ள மில்களில் உற்பத்தி ஆகிய நூல் மில் வாரியாக, நம்பர் வாரியாக எல்லா ஆங்கில, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னட தினசரி பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு மில்களிலிருந்தும், எந்தெந்த ஜில்லாக்களுக்கு எந்தெந்த தேதியில், எவ்வளவு பேல்கள் அனுப்பப்பட்டன என்கிற விபரம் அடங்கிய ஒரு மாதத்தின் கணக்கை அடுத்த மாதத்தின் முதல் வாரத்தில் பிரசுரிக்க வேண்டும்.

உற்பத்தி ஸ்தலங்களிலிருந்து கிளம்பிய நூல் வினியோகத்திற்காக ஜில்லா கண்ட்ரோல் அதிகாரிகளுக்குக் கிடைத்தவுடன் அந்த அதிகாரிகள் ஜில்லா அட்வைஸரி கமிட்டிகளைக் கலந்து நம்பர் வாரியாக தறிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாதம் இருமுறை அலாட்மெண்டு போடுவதன்னியில், அப்படிப் போடப்பட்ட அலாட்மெண்டின் விளைவாக நம்பர் வாரியாக ஒவ்வொரு நெசவுத் தொழிலாளிக்கும் எத்தனை பவுண்டு நூல் கிடைக்கும் என்பதை டெக்ஸ்டைல் கண்ட்ரோல் ஆபீஸரின் ஆபீஸ் நோட்டீஸ் போர்டில் கண்ட்ரோல் அதிகாரி எழுதிப் போடவேண்டும்.

மில்களில் பல ரக நம்பர் நூல் உற்பத்தி செய்வதற்குப் பதிலாக 10, 20, 30, 40, 60, 80, 100 நிர். ஒத்தை நூலாகவும், 2x10, 2x20, 2x40 இரட்டை நூலாகவும் உற்பத்தி செய்தால்

ஜமக்காளம் முதல் நைஸ் வேஷ்டி, புடவை வரை உற்பத்தி செய்ய முடியும்.

நூல் பஞ்சம் போக்கவும், துணிக் கஷ்டத்தை தீர்க்கவும் காங்கிரஸ் மந்திரி சபை உடனடியாக நூல் உற்பத்தியைப் பெருக்குவதில் விசேஷ கவனம் செலுத்தியாக வேண்டும். அதற்காக எந்தெந்த மில்களில் சாத்தியமோ அந்தந்த மில்களில் நூல் உற்பத்திக் கதிர் (Spindles) களை அதிகப்படுத்த வேண்டும்.

நம் மாகாணத்தில் உள்ள எல்லா மில்களிலும் 3 ஷிப்டு முறையை அமுலில் கொண்டுவந்தாக வேண்டும். இதனால் நூல் நெருக்கடியையும், துணிப் பஞ்சத்தையும் சமாளிக்க முடிவதுடன் நமது மாகாணத்தில் உள்ள தொழிலாளர்களை பயமுறுத்திக் கொண்டிருக்கும் ஆள் குறைப்பு, சம்பள வெட்டு, வேலையில்லாத் திண்டாட்டம் இவைகளைப் போக்க முடியும்.

இம்மாதம் 4-ந் தேதி பம்பாய் டெக்ஸ்டைல் கமிஷனரான ஸ்ரீ தர்மவீரா புதிதாக ஸ்பின்னிங் மில்களை (Spinning Mills) ஆரம்பிக்க மத்திய சர்க்கார் அனுமதிக்கும் என்று அறிக்கை விட்டிருப்பதை கவனத்தில் வைத்துக்கொண்டு, "யுத்த பிற்கால நிர்மாண திட்டத்திற்காக" ஒதுக்கப்பட்டிருக்கும் தொகையிலிருந்து நமது மாகாணத்தில் கைத்தொழில் வளர்ச்சியில் பின்னடைந்திருக்கும் ஜில்லாக்களில் புதிய மில்களைக் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும். சென்னை மாகாண நெசவாளர் கோவாப்பரேடிவ் சொஸைட்டியாரிடம் சுமார் 60 லக்ஷம் ரூபாய்கள் ரிஸர்வு பண்டாக இருப்பதாகத் தெரிவதால் அந்தப் பணத்தைக் கொண்டும் புதிய மில்களைக் கட்டலாம்.

கைத்தறி நெசவுத் தொழிலை எதிர்காலத்தில் கோவாப்பரேடிவ் சொஸைட்டிகளின் மூலம்தான் காப்பாற்ற முடியுமாகையால், புதிதாக சொஸைட்டிகள் ஆரம்பிக்கப்பட்டால் ரிஜிஸ்தர் செய்யப்பட மாட்டாது என்று அமுலிலிருக்கும் உத்திரவை காங்கிரஸ் மந்திரி சபை உடனே ரத்து செய்யவேண்டும்.

நெசவாளர் கோவாப்பரேடிவ் சொஸைட்டிகள் எக்காரணத்தைக் கொண்டும் தனிப்பட்ட வியாபாரிகளுக்கு ஜவுளிகளை விற்கக் கூடாது என்று உத்திரவிட்டாக வேண்டும். அப்படி விற்பதால் கைத்தறி ஜவுளிகளின் விலை ஏறுவதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

எல்லா முனிசிபல் நகரங்களிலும் கோவாப்பரேடிவ் சொஸைட்டியின் விற்பனை ஸ்தலங்கள் (Emporiums) திறக்கப் படவேண்டும்.

நூலுக்கு சாயம் போடும் தொழிலைப் பாதுகாக்கவும், அபிவிருத்தி செய்யவும் வேண்டியது அவசியம்தான். ஆனால் சாயப் பட்டரைக்காரர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் சலுகைகளை உபயோகித்து சாதா சாயத்தில் (Direct Colour) நனைத்து விட்டு கெட்டிச் சாயம் (Fast Colour) போட்டிருப்பதாகச் சொல்லி நெசவாளரிடத்திலிருந்து நியாயமற்ற சாயக்கூலி பெற்றும், கைத்தறி கலர் ஜவுளியை உபயோகிக்கும் கோடிக்கணக்கான பொதுஜனங்களை ஏமாற்றியும் பணம் சம்பாதிப்பதை பொதுஜன சர்க்கார் அனுமதிக்க முடியாது. ஆகையால் நம் மாகாணத்தில் உள்ள சகல நெசவுத் தொழிலாளர்களும் கோருகிறபடி எல்லா நெசவாளருக்கும் வெள்ளை நூலாகவே வினியோகிக்க வேண்டும். இதனால் நெசவாளர் தங்களுக்கு இஷ்டமான கலர்களை, நியாயமான கூலி கொடுத்து, நிர்ப்பந்தம் இல்லாமல் சாயம் போட்டுக் கொள்வார்கள். இதனால் சிறிய சாயப் பட்டரைகள் வளர்ச்சியடைந்து பொதுவாக சாயத் தொழிலே மிகவும் வளர்ச்சி அடைய அரிய சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

நூல் வினியோகத்தில் மில்களுக்கும், தறிகாரருக்கும் இடையில் தரகர்கள் இருப்பதால் பல ஊழல்களுக்கு இடம் ஏற்படுவதுடன் நிர்ணயிக்கப்பட்ட நூல் ஏழை நெசவுத் தொழிலாளர்களுக்குப் போய்ச் சேருவதில்லை. ஆகையால் எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் நூல் வினியோகத்திற்கென தனியாக கோவாப்பரேடிவ் சொஸைட்டிகள் திறப்பதுடன் பல பிரதேசங்களில் கிளைகளையும் ஏற்படுத்த அனுமதிக்கவேண்டும். நூல், துணி நெருக்கடி தீரும் வரையிலாவது காங்கிரஸ் மந்திரி சபை தைரியமாக கோவாப்பரேடிவ் சொஸைட்டிகளின்மூலம் நூல் வினியோகம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும்.

கண்ட்ரோல் விலைக்கு நூல் ரேஷன் செய்யப்படவேண்டும், சாயக் கூலியைக் கட்டுப்படுத்தவேண்டும் என்று கோரும் எந்த நெசவுத் தொழிலாளியும் கோடிக்கணக்கான ஏழை விவசாயி மக்களுக்கு குறைந்த விலையில் கைத்தறி ஜவுளி போய்ச் சேருவதற்காக கைத்தறி ஜவுளி விலை கட்டுப்பாடு செய்யப்படுவதை ஆட்சேபிக்கவில்லை. கைத்தறி ஜவுளி விலை அகாதமாய் ஏறியிருப்பதற்கு கைத்தறி நெசவுத் தொழிலாளிக்குக் கொடுக்கப்படும் அதிகக் கூலி காரணம் அல்லவே அல்ல. ஆனால் கைத்தறி ஜவுளிக் கண்ட்ரோலை சாக்காக உபயோகித்து பெரிய மாஸ்டர் வீவர்கள் ஏழை நெசவுத் தொழிலாளியின் வயிற்றில் அடிப்பதைத் தடுக்க கைத்தறி ஜவுளியின் விலை கண்ட்ரோல் செய்யப்படும்பொழுதே நெசவுத் தொழிலாளியின் கூலியும் நிர்ணயிக்கப்பட்டுவிட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளை நூல் நெருக்கடியையும், துணி பஞ்சத்தையும், கள்ளமார்க்கெட்டையும் ஆறு மாத காலத்திற்குள் ஒழிக்க சபதமிட்டிருக்கும் காங்கிரஸ் மந்திரி சபை நிறைவேற்றும்படி நமது மாகாணத்தில் உள்ள எல்லா காங்கிரஸ், லீக் தேச பக்தர்களும், காங்கிரஸ், லீக் கமிட்டிகளும், சகல தொழிற்சங்கங்களும், கிசான் சபை, கிசான் காங்கிரஸ் கமிட்டிகளும், மாணவர் சங்கங்களும், மாதர் சங்கங்களும், மாஸ்டர் வீவர் சங்கங்களும், கைத்தறி ஜவுளி வியாபாரிகள் சங்கங்களும், தேசியப் பத்திரிகைகளும் ஒருமுகப்பட்டு பலத்த கிளர்ச்சிசெய்ய முன்வரவேண்டும். அப்பொழுதுதான் அதிகாரவர்க்கத்தின் முட்டுக்கட்டைகளையும், லாபமே குறிக்கோளாகக் கொண்டு பஞ்சத்தை சிருஷ்டிக்கும் மில் முதலாளிகள், கொள்ளைலாப கள்ளமார்க்கெட் வியாபாரிகள் இவர்களின் எதிர்ப்புக்களையும் உடைத்தெறிந்து தைரியமாகக் காரியங்களைச் செய்ய காங்கிரஸ் மந்திரி சபையின் கைகளை பலப்படுத்தும்.

## அனுபந்தம் (1)

# மாதாந்திர ஜவுளி உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி கணக்கு

சென்னை மாகாண டெக்ஸ்டைல் கமிஷனரால் சட்டசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மாகாணத்தின் ஜவுளி (கைத் தறி ஜவுளி உள்பட) ஏற்றுமதி இறக்குமதி புள்ளி விபரம்.

1 பேல்—1500 கெஜம்

| விபரம் | பேல் கணக்கில் | |
|---|---|---|
| | உற்பத்தி | ஏற்றுமதி |
| கைத்தறிகள் மூலம் உற்பத்தி ... | 24007 | |
| அந்நிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்ததுபோக மீதி மில் ஜவுளி உற்பத்தி ... | 5200 | |
| இதர பிரதேசங்களிலிருந்து இறக்குமதி ... | 376 | |
| | 29583 | |
| பம்பாயிலிருந்து நமது மாகாணத்திற்கென ஒதுக்கப்பட்டது... | 8307 | |
| | 37890 | |
| வெளி மாகாணங்களுக்கு கைத்தறி ஜவுளி ஏற்றுமதி ... | | 3816 |
| வெளி தேசங்களுக்கு மில் ஜவுளி ஏற்றுமதி ... | | 668 |
| வெளி மாகாணங்களுக்கு மில் ஜவுளி ஏற்றுமதி ... | | 1455 |
| நம் மாகாணத்திற்கு தலா 12 கெஜம் வீதம் ... | 31951 | 5939 |

## அனுபந்தம் (2)

# மாதாந்திர நூல் உற்பத்திக் கணக்கு

சென்னை மாகாண டெக்ஸ்டைல் கமிஷனரால் சட்டசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மாகாணத்தின் நூல் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி புள்ளி விபரம்.

1 *பேல்—400 ராத்தல்*

| விபரம் | பேல் கணக்கில் | |
|---|---|---|
| | உற்பத்தி | வினியோகம் |
| நமது மாகாணத்தின் நூல் உற்பத்தி ... | 48400 | |
| நமது மாகாணத்தின் ஜவுளி நெசவு மில்களுக்குக் கொடுக்கப்படுவது ... | | 7800 |
| ராணுவத்தின் தேவைக்காக கொடுப்பது ... | | 2000 |
| | 48400 | 9800 |
| பாக்கி நூலாக மிஞ்சுவது ... | 38600 | |
| வெளிமாகாணங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது ... | 18619 | |
| நமது மாகாணத்தின் தேவைக்காக ... | 19981 | |
| நம் மாகாணத்தின் உற்பத்தியில் நிறுத்திக்கொள்வது ... | 1324 | |
| வெளி மாகாணங்களிலிருந்து நமக்கு கிடைக்கும் நூல் ... | 21305 | |

## அனுபந்தம் (3)

# மாதாந்திர நூல் வினியோகக் கணக்கு

சென்னை மாகாண டெக்ஸ்டைல் கமிஷனரால் சட்டசபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட மாகாணத்தின் நூல் வினியோகக் கணக்கு.

1 பேல்—400 ராத்தல்

| விபரம் | பேல் கணக்கில் | |
|---|---|---|
| நமது மாகாணத்திற்கு கிடைக்கும் கோட்டா நூல் ... | 21305 | |
| நம் மாகாணத்தில் உள்ள "விசைத் தறி" (Power-Loom factories) க்கு கொடுக்கப்படுவது ... | | 882 |
| நம் மாகாணத்தில் உள்ள "பனியன்" உற்பத்தி சாலைகளுக்கு கொடுக்கப்படுவது ... | | 500 |
| மீன் பிடிக்கும் வலை, டேப், நாடா, பால்திரட் (தையல் நூல்) போன்றவைகளை உற்பத்தி செய்ய ... | | 762 |
| | 21305 | 2144 |
| நம் மாகாணத்தில் உள்ள 496000 கைத்தறிகளுக்கு சப்ளை செய்ய மிஞ்சும் நூல் ... | 19161 | |

# அனுபந்தம் (4)

நமது மாகாணத்தில் கைத்தறிகளுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் **19161** பேல்களின் ஜில்லாவாரி நிர்ணயக் கணக்கு.

| | ஜில்லாவின் பெயர் | சர்க்காரின் சென்சஸ்படி தறிகள் | நிர்ணயித்திருக்கும் பேல்கள் |
|---|---|---|---|
| 1 | சேலம் ... | 65073 | 2190 |
| 2 | வட ஆற்காடு ... | 38856 | 1266 |
| 3 | கோயம்புத்தூர் ... | 28113 | 1221 |
| 4 | செங்கற்பட்டு ... | 30684 | 834 |
| 5 | குண்டூர் ... | 22447 | 946 |
| 6 | இராமநாதபுரம் ... | 25830 | 983 |
| 7 | தென் கன்னடம் ... | 5497 | 191 |
| 8 | திருநெல்வேலி ... | 30126 | 1265 |
| 9 | மேற்கு கோதாவரி ... | 7909 | 300 |
| 10 | கிழக்கு கோதாவரி ... | 18900 | 734 |
| 11 | கர்நூல் ... | 8757 | 492 |
| 12 | கடப்பை ... | 19932 | 718 |
| 13 | தென் ஆற்காடு ... | 24438 | 740 |
| 14 | நெல்லூர் ... | 13051 | 566 |
| 15 | அனந்தபூர் ... | 10525 | 537 |
| 16 | மலபார் ... | 28235 | 1336 |
| 17 | தஞ்சாவூர் ... | 10415 | 298 |
| 18 | பல்லாரி ... | 14079 | 704 |
| 19 | விசாகப்பட்டினம் ... | 27169 | 1192 |
| 20 | மதுரை ... | 24367 | 778 |
| 21 | திருச்சிறாப்பள்ளி ... | 14070 | 917 |
| 22 | சித்தூர் ... | 15935 | 559 |
| 23 | கிருஷ்ணா ... | 7821 | 288 |
| 24 | மதராஸ் ... | 3714 | 106 |
| | மாகாணத்தின் மொத்த கைத்தறிகளும், நூலும் ... | 495943 | 19161 |